1974 மார்ச் 7]

அதற்குப் பின்னர் சாக்கடை கால்வாய் அமைந்துள்ள பகுதிகளில் புதை சாக்கடை மூலம் கழிவு நீரை அகற்றும் திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்று 1964-ம் ஆண்டில் அரசு ஆணை மூலம் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் கழிவுநீர்க் குட்டை, கழிவு நீர் வாய்க்கால்களைச் சீரமைக்க 1961-ம் ஆண்டில் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தொடர்ந்து இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பின்மை காரணமாகக் கைவிடப்பட்டது. அண்மையில் ஒரு விரிவான திட்டம் தயாரிக்க ஆய்வு செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. 1968-ம் ஆண்டில் கழிவு நீர் அகற்றும் திட்டத்திற்கு வகை செய்கிற வகையில் சேலம் நகராட்சிக்கு ஒரு அடங்கல் வடிகால் திட்டம் வகுக்கப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டு, அது முடிக்கப் பட்டுள்ளது. மேலும் குடிநீர் வடிகால் வாரியத்தில் இத்திட்டம் ஆராயப்பட்டு, அரசின் ஏற்புக்கு அனுப்பிவைக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, சேலம் நகரம் ஒரு மாவட்டத்தின் தலைநகர். ஆகவே, பாதாள சாக் கடைத் திட்டத்தைத் தாமதப்படுத்துவதனால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, இந்த அரசு இனிமேலாவது இத் திட்டத்தைத் துரிதமாக நிறைவேற்ற ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, நான்கு ஆண்டுகளுக்கு முன்பே கழிவுநீர் அகற்றும் திட்டம் மேற்கொள்ளப் பட்டிருந்தும், குடிநீர் திட்டத்திற்கு முக்கியத்துவம் தரவேண்டு மென்று அரசு கருதியதால், குடிநீர் திட்டத்திற்குப் பெரும் தொகை செலவிட வேண்டியிருந்ததால் கழிவுநீர் அகற்றும் திட்டங் களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. ஆனால் மறுபடியும் இத் திட்டங்களைச் செயல்படுத்த அரசு கருதியிருக்கிறது. நிதி நிலைக்கேற்ப திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

பின்தங்கிய வகுப்பு மாணவர் விடுதிகள்.

* 321 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973 ஆகஸ்டு 23-24 தேதிகளில் தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் பிற்பட்ட மாணவர் விடுதிகளை திடீர் சோதனையிட்டார்களா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) விவரங்களடங்கிய அறிக்கை @ பேரவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

* 322 வினா—**திரு. மே. சி. தூயமணி :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் நகரில் பிற்பட்ட வகுப்பு மாணவர் விடுதி ஒன்றை அமைக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தற்போது மேட்டுப் பாளையத்தில் பிற்பட்ட வகுப்பு மாணவர் விடுதி துவக்கும் குறிப்பு ஏதும் அரசு பரிசீலனையில் இல்லை.

திரு. மே. சி. தூயமணி : தலைவரவர்களே, மேட்டுப்பாளையத்தில் ஏராளமான பின்தங்கிய வகுப்பு மாணவர்கள் படிக்கிறார்கள். அவர்கள் தங்கிப் படிக்க விடுதி இல்லை. அவர்கள் மனக்குறையைப் போக்கும் வகையில் அவர்கள் தங்கிப் படிப்பதற்கு மாணவர் விடுதி ஒன்றை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தற்போது அப்படிப் பட்ட பரிசீலனை இல்லை. நிதிநிலை வசதி ஏற்படும்போது மாண்பு மிகு உறுப்பினரின் கருத்து பரிசீலிக்கப்படும்.

தாமிரவருணி ஆற்றின் குறுக்கே பாலம்

* 323 வினா—**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1968-69-ம் ஆண்டில் தென் திருநெல்வேலி மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் முக்கூடல் வீரவநல்லூர் கிராமங்களை இணைக்க தாமிரவருணி நதியின் குறுக்கே ஒரு பாலம் கட்டவும் மேற்படித் திட்டத்தினைத் திட்ட வேலையில் சேர்ப்பதற்கும் அரசின ருக்குச் சிபாரிசு செய்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக் கைகள் யாவை?

@ 601–503-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.